DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 78/2021

Miscellaneous :

Sessions : PW 4

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | சுரேஷ் |
| Father / Husband Name | சுப்புரமணி |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 30.10.2025

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது சென்னை மைலாப்பூரில் வசித்து கோவிலில் வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன பாஸ்கர் என்பவர் என்னுடைய நண்பர். 18.08.2017 ம் தேதி என்னுடைய நண்பர் பாஸ்கர் அவருடைய நண்பர்களுடன் வேனில் திருவக்கரை கோவிலுக்கு செல்லும்போது விபத்து ஏற்பட்டதாக சொன்னார்கள். நான் சென்னை அரசு மருத்துவமனையில் சென்று பார்த்தபோது தலை, கை, காலில் அடிப்பட்டு இறந்துவிட்டார். அவரது பிரேதத்தின் மீது போலிசார் விசாரணை செய்தார்கள், நான் சாட்சியாக இருந்தேன்.

**குறுக்கு விசாரணை**

2. விபத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். விபத்து யாருடைய கவனக்குறைவாலும், அஜாக்கிரதையாலும் நடந்தது என்று எனக்கு தெரியாது.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 78/2021

Miscellaneous :

Sessions : PW 5

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | மதியழகன் |
| Father / Husband Name | காசி |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 30.10.2025

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது சென்னை திருவள்ளிக்கேணியில் வசித்து கார் மெக்கானிக்காக வேலை செய்து வருகிறேன். சாட்சி ரமேஷ் என்பவரை தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். **(பார்வை மகசரில் உள்ள அசா5 ன் முதலாவது கையொப்பம் அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** 19.08.2017 ம் தேதி அதிகாலை 2.30 மணியளவில் அரசு பேருந்து ஒரு வேனின் பின் பக்கம் மோதி விபத்து ஏற்படுத்தியது சம்மந்தமாக போலிசார் சம்பவயிடம் வந்து விசாரித்து என்னிடம் சாட்சி கையொப்பம் கேட்டார்கள், நான் போட்டேன். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

**2.** விபத்து சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள். போலிசார் என்னை 19.08.2017 அன்று சம்பவயிடத்தில் வைத்து காலை சுமார் 3 முதல் 4 மணியளவில் விசாரித்தார்கள். அப்போது என்னுடன் ரமேஷ் என்பவரும் இருந்தார். அங்கு எங்களை தவிர 7 முதல் 8 நபர்கள் இருந்தார்கள். அப்போது போலிசார் எங்களை மட்டும் தான் விசாரித்தார்களா என்றால் இல்லை, அருகில் இருந்த உணவகத்தில் இருந்தவர்களையும் விசாரித்தார்கள். நான் காவல் நிலையத்தில் வைத்து தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்த தாளில் என்ன விவரம் இருந்தது என்றால் எனக்கு தெரியாது. போலிசார் கையொப்பம் செய்ய சொன்னதால் செய்தேன் என்றால் சரிதான்.